செய்தி வெளியீடு எண் : 1186 நாள் : 15.07.2022

<u>செய்தி வெளியீடு</u>

இன்று (15.07.2022) சென்னை, சைதாப்பேட்டையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் 75000 சதுர அடி பரப்பில் 6 தளங்களுடன் கூடிய நவீன மாணவர் விடுதி ரூ.40 கோடி மதிப்பிட்டில் கட்டப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புதிய விடுதி கட்டப்படவுள்ள இடத்தினை தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் நிதித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.என்.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, ஆதிதிராவிடர் மற்றும பழங்குடியினர் நலத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல ஆணையர் திருமதி.சோ.மதுமதி, இ.ஆ.ப., பொதுப்பணித்துறையின் முதன்மைப் பொறியாளர் திரு. விஸ்வநாத் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்

************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in